www.Padasalai.Net www.TrbTnpsc.com

# 10 - STD இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2024

நேரம் : 3.00 மணி **தமிழ்** மதிப்பெண்கள்: 100

I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக YouTube/ Akwa Academy 15 x 1 = 15

1. வேர்கடலை, மிளகாய்விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை ____
   அ) குலைவகை ஆ) மணிவகை இ) கொழுந்துவகை ஈ) இலை வகை
2. 'பாடு இமிழ் பனிக்கடல் பருகி ' என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி
   அ. கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ. கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
   இ. கடல் நீர் ஒலித்தல் ஈ. கடல் நீர் கொந்தளித்தல்
3. காலக்கணிதம் கவிதையில் இடம் பெற்ற தொடர்____________
   அ) இகந்தால் என்மனம் இறந்துவிடாது ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
   இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்
4. "மருந்தே ஆயினும் விருந்தோடு உண் " என்னும் அடிகள் இடம் பெற்றுள்ள நூல்
   அ. குறுந்தொகை ஆ. கொன்றை வேந்தன் இ. திருக்குறள் ஈ. நற்றிணை
5. வெளிநாட்டில் வேலை செய்துகொண்டிருக்கும் தாயைப் பிரிந்திருக்கும் மகள் ____________
   அ) தாமரை இலை நீர் போல் ஆ) வாழையடி வாழை
   இ) கண்ணினைக் காக்கும் இமை போல ஈ) மழை முகம் காணாப் பயிர் போல
6. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுப்படுத்தக் காரணமாக அமைவது.
   அ) எழுவாய் ஆ) வேற்றுமை உருபு இ) உவம உருபு ஈ) உரிச்சொல்
7. குமரி மாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர் ____________
   அ) திரு.பிரகாசம் ஆ) மார்ஷல்.ஏ.நேசமணி இ) தனிநாயகம் அடிகள் ஈ) ந. முத்துசாமி
8. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டு குறிப்பு உணர்த்தும் செய்தி.
   அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது. ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
   இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
   ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
9. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
   அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா
10. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக் கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது?
    அ) கரகாட்டம் என்றால் என்ன? ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும் ?
    இ) கரகாட்டத்தின் வெவ்வேறு வடிவங்கள் யாவை? ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?
11. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி
    அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

**பாடலைப் படித்து வினாக்களுக்கு(12,13,14,15) விடையளிக்க:-**

' முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்
மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்
அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு
இணைகிடந்த தேதமிழ் ஈண்டு "

12. இப்பாடல் இடம் பெற்ற நூல்
    அ. நற்றிணை ஆ. முல்லைப்பாட்டு இ. குறுந்தொகை ஈ.தனிப்பாடல் திரட்டு
13. பாடலில் இடம் பெற்றுள்ள பொருத்தமான அணி
    அ. இரட்டுற மொழிதல் அணி ஆ, தீவக அணி
    இ. வஞ்சப்புகழ்ச்சி அணி ஈ. நிரல் நிறை அணி
14. தமிழுக்கு இணையாய்ப் பாடலில் பொருத்தப்படுவது
    அ. சங்கப் பலகை ஆ. கடல் இ. அணிகலன் ஈ. புலவர்கள்
15. இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடிஎதுகை சொற்கள்
    அ. முத்தமிழ் - முச்சங்கம் ஆ. சங்கம் - நித்தம்
    இ. அனைகிடந்தே - இணை கிடந்த ஈ. ஆழிக்கு - தமிழ்

**II. ஏதேனும் 4 வினாக்களுக்கு விடையளி (வினா எண். 21 கட்டாயம்)** 4 x 2= 8

16. விடைக்கேற்ற வினா அமைக்க.
    அ. சம்பாவில் அறுபது உள்வகைகள் உண்டு.
    ஆ. ஜப்பானில் சாப்ட்வங்கி உருவாக்கிய இயந்திர மனிதன் பெப்பர்.
17. " காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன் " - உவமை உணர்த்தும் கருத்து யாது?
18. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல் வழி குறிப்பிடுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

19. ஆற்றுப்படை என்றால் என்ன?
20. வசன கவிதை – குறிப்பு வரைக
21. உலகு – எனத் முடியும் குறளை எழுதுக.

**III. ஏதேனும் 5 வினாக்களுக்கு மட்டும் விடையளி** 5 x 2= 10

22. வினாவின் வகைகளைக் கூறுக
23. மாமழை பெய்கையிலே
    மாம்பூவே கண்ணுறங்கு – தொடர்வகைகளை எழுதுக
24. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக:- வளி - வாளி
25. கலைச்சொல் தருக
    அ. COSMIC RAYS
    ஆ. INTELLECTUAL
26. ஊர்ப்பெயர்களின் மரூஉ எழுதுக. அ. திருநெல்வேலி ஆ. மன்னார் குடி
27. வருக – பகுபத உறுப்பிலக்கணம் தருக
    **குறிப்பு :- செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா**
    எதிர்மறையாக எழுதுக :-
    அ. மீளாத்துயர்
    ஆ) எழுதாக் கவிதை
28. பொருள் கூறுக:-
    அ. கட்புள்
    ஆ) திருவில்

**IV. ஏதேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளி** 2 x 3 = 6

29. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப்படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கல்வி கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?
30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி
    சிற்றூர் மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளில் பிரித்துப் பார்க்க இயலாதக் கூறுகளாகத் திகழ்பவை நிகழ்கலைகள். இவை மக்களுக்கு மகிழ்ச்சியெனும் கனி கொடுத்துக் கவலையைப் போக்குகின்றன; சமுதாய நிகழ்வுகளின் ஆவணங்களாகவும் செய்திகளைத் தரும் ஊடகங்களாகவும் திகழ்கின்றன. பழந்தமிழ் மக்களின் கலை, அழகியல், புதுமை ஆகியவற்றின் எச்சங்களை அறிவதற்குத் தற்காலத்தில் நிகழ்த்தப்படும் கலைகள் துணை செய்கின்றன,
    அ) பழந்தமிழ் மக்களின் எந்தெந்த எச்சங்களை அறிவதற்கு நிகழ்கலைகள் துணை செய்கின்றன?
    ஆ) நிகழ்கலைகளின் பயன்கள் இரண்டினை எழுதுக.
    இ) நிகழ்கலைகள் எப்பகுதி மக்களின் வாழ்வியல் கூறுகளில் ஒன்றாக திகழ்கின்றன?
31. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" – இடம் சுட்டிப் பொருள் விளக்குக.

**V. ஏதேனும் 2 வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி (வினா எண். 34 கட்டாயம்)** 2 x 3 = 6

32. முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.பா.ரா " ஏர் புதிதா?" கவிதையில் கவி பாடுகிறார்?
33. வள்ளுவம்,சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள் வழி விளக்குக.
34. "அருளைப் " எனத் தொடங்கும் நீதிவெண்பா பாடலை அடிமாறாமல் எழுதுக
    (அல்லது )
    " தூசும் துகிரும் " எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை எழுதுக.

**VI. ஏதேனும் 2 வினாக்களுக்கு விடையளி** 2 x 3 = 6

35. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக
36. பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னாம்
    கண்ணோட்டம் இல்லாத கண். – இக்குறளை அலகிடுக.
37. கவிஞர் தாம் கூற விரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை விளக்குக.

**VII. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** 5 x 5 = 25

38. அ) சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சான்றுகள் தருக.
    (அல்லது )
    ஆ) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?
39. அ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலைக் கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு கடிதம் எழுதுக. (அல்லது )
    ஆ. பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.



Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

40. படம் உணர்த்தும் கருத்தை கவினுற எழுதுக.



41. அ) நீங்கள் பள்ளியிலும், வீட்டிலும் நடந்துக் கொள்ளும் விதத்தை பட்டியலிடுக (அல்லது)

ஆ) மொழிபெயர்க்க:-

The Golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant. YouTube/ Akwa Academy

குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா

உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

மேற்கு என்பதற்குக் குடக்கு என்னும் பெயருமுண்டு. மேற்கிலிருந்து வீசும் போது நான் கோடை எனப்படுகிறேன், மேற்கிலிருந்து அதிக வலிமையோடு வீசுகிறேன். வறண்ட நிலப்பகுதியிலிருந்து வீசுவதால் வெப்பக்காற்றாகிறேன். வடக்கு என்பதற்கு வாடை என்னும் பெயருமுண்டு. வடக்கிலிருந்து வீசும்போது நான் வாடைக்காற்று எனப்படுகிறேன். நான் பனிப்பகுதியிலிருந்து வீசுவதால் மிகவும் குளிர்ச்சியான ஊதைக்காற்று எனப்படுகிறேன்.

1. மேற்கிலிருந்து வீசும் காற்று யாது?
2. ஊதைக்காற்று என அழைப்பதேன்?
3. மேற்கு என்பதற்கு மற்றொரு பெயர் என்ன?
4. வாடை என்பது எத்திசையைக் குறிக்கிறது?
5. இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு தருக.

---

42. கதவு எண்- 23, பாரதி தெரு, கிருஷ்ணகிரியில் வசித்து வரும் கண்ணன் மகள் புனிதா, கிருஷ்ணகிரி கிளை நூலகத்தில் உறுப்பினராகச் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை புனிதாவாக கருதி உரிய படிவத்தை நிரப்புக.

**நூலக உறுப்பினர் படிவம்**

__________ மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய/கிளை / ஊர்ப்புற நூலகம் ____________________

அட்டை எண் **உறுப்பினர் சேர்க்கை அட்டை** உறுப்பினர் எண் [ ]

1. பெயர் : ____________
2. தந்தை பெயர் : ____________
3. பிறந்த நாள் : ____________
4. வயது : ____________
5. படிப்பு : ____________
6. தொலைபேசி எண் : ____________
7. முகவரி : ____________
(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) ____________

நான் __________ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ______ சந்தா தொகை ரூ______ ஆக மொத்தம் ரூ______ பணமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம்:

நாள்: தங்கள் உண்மையுள்ள

திரு/திருமதி/செல்வி / செல்வன் ______ அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச் சான்றளிக்கிறேன்.

அலுவலக முத்திரை பிணைப்பாளர் கையொப்பம் (பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில/மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள் பேராசிரியர்கள், உயர்/மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)

**VIII. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** **3 x 8 = 24**

43. அ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

(அல்லது )

ஆ) தமிழின் சொல்வளம் பற்றியும், புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும், அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் ' கோபல்லபுரத்து மக்கள் ' கதைப் பகுதி கொண்டு விவரிக்க

(அல்லது )

ஆ) நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக.

**மகளிர் நாள் விழா**

இடம் - பள்ளிக் கலையரங்கம் நாள் -08.03.2019

கலையரங்கத்தில் ஆசிரியர்கள்,மாணவர்கள் கூடுதல் - தலைமையாசிரியரின் வரவேற்பு - இதழாளர் கலையரசியின் சிறப்புரை - ஆசிரியர்களின் வாழ்த்துரை - மாணவத் தலைவரின் நன்றியுரை.

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

குறிப்புகள்: முன்னுரை - கொரோனா பெருந்தொற்று - தடுப்பு நடவடிக்கைகள் - விழிப்புணர்வுச் செயல்பாடுகள் - நமது கடமைகள் - முடிவுரை

(அல்லது )

ஆ) குறிப்புகளைக் கொண்டு பொருட்காட்சிக்குச் சென்ற நிகழ்வைக் கட்டுரை எழுதுக.

குறிப்புகள் : முன்னுரை - பொருட்காட்சி அமைவிடம் - நுழைவுக்கட்டணம் - பலவித அரங்குகள் - நடைபெற்ற நிகழ்ச்சிகள் - பல்துறை அங்காடிகள் - பெற்ற உணர்களும் நன்மைகளும் - முடிவுரை

Padasalai.Net